விலை : 50.00
பக்கங்கள் - 16

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

valampurii

சங்கு 25 E-mail: valampurii@yahoo.com,

ஒலி 274 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 02 புதன்கிழமை (18.09.2024) தொலைபேசி 222 3378 பக்ஸ்- 222 7829

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

நாம் எமது குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் தேசத்தின் எதிர்காலத்திற்காகவும் சஜித் பிரேமதாச உடன் தோளுக்கு தோளாய் நிற்கின்றோம்"



சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

"தேசத்தின் பொதுமக்களுக்கு,

தேசத்தின் விரிவுரையாளர்களும் கற்றல் வழிகாட்டிகளுமாகிய நாம், தேசத்தின் எதிர்கால இளைஞர்களை பாதுகாத்தல் நிமித்தம் ஒன்றிணைந்து கைகோர்க்க உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். எமது பல்கலைக்கழகங்கள் அரசியலுக்கான நாடகமேடையாக அமைந்துவிடக்கூடாது. எமது கொள்கைகளையும் கற்றல் நெறிகளையும் அனர்த்தங்களை நோக்கி இட்டுசெல்பவர்களின் கைகளுக்கு அதிகாரத்தினை பெற்றுக்கொடுக்க இடமளியாதீர்கள். ஒழுக்க-விழுமியம், கற்றல் மற்றும் வளர்ச்சியின் பக்கம் மார்நிமிர்த்தி நிற்கும் தலைவனுக்கு உங்கள் வாக்குகளை பெற்றுக்கொடுங்கள்."

எமரிட்டஸ் பேராசிரியர் G.L. பீரிஸ், கொழும்புப் பல்கலைக்கழகம்.

எமரிட்டஸ் பேராசிரியர் S.B. ஹெட்டியாராச்சி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

எமரிட்டஸ் பேராசிரியர் K. சமரசிங்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் உப்புள் B. திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர். கென்னடி D. குணவர்தன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர். அனுர உதுமங்கே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் நயனி மெலேகொட, கொழும்புப் பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் நதாலகமுவே தம்மதின்ன, களனி பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் K.K.I.U. அருண குமார, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த பேராசிரியர் W.M.D. தேசப்பிரிய குணசேன, களனி பல்கலைக்கழகம்.

ஓய்வுபெற்ற மூத்த பேராசிரியர். தயா அமரசேகர, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் கமலா லியநகே, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் H.M. நவரத்ன பண்டா, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் J.M. ஆனந்த ஜயவிக்ரம, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் உப்புள் அபேரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் B.W.R. தமயந்தி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.G. அமரசிங்க, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் T.M.L. தம்மிக்கா சுபாஷிணி, களனி பல்கல்லைக்கழகம்.

பேராசிரியர் P. ஐங்கரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.M. ஃபாஸில், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. சப்ராஸ் நவாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.H. தவ்ஃபீக், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A. ஜஃபர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.A.S.F. சாதியா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.C.A. நஸார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.L.A. றௌவுஃப், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.I.M. ஹிலால், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.K.D. கீர்த்திரத்ன, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் C.R. வித்தானாச்சி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சுமனசிரி வாவ்வகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அலெக்சாண்டர் கப்புகொட்டுவ, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.A. அசீஸ், கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S.C.P. குமார, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் கீத்தானி புலங்குலம, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தம்மிக திசாநாயக்க, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் மோஜித் ஆரியரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சஞ்சீவி மந்திரீரத்ன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.M.M.P.S. பண்டார, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் R.M.M. சந்திரரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ரோஹித்த தசநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.S.M. சலீம், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. விஜயசந்திரன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் D.M.L. திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.V. சந்திரசிரி, உறுகுணை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. ஸ்பீர் நவாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A. ஜஃபர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் P.D. பிரேமசிரி, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S. பிரிஷாந்தன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அத்தம்பவா சர்ஜூன், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.K.L. ஐங்கரனி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ப்ரேமா பொடிமெனிக்கே, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வீரசேனா, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் R.P.I.R. ப்ரசன்னா, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் டிக்கிரி ஹேரத், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் பிரதீப் வீரசிங்க, கொழும்புப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் காமினி ரத்னசிரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் S.A. கலன்சூரிய, பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் விஷாகா சூரியபண்டார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.Z.M. நஃபீல், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் துஷேஷ் குணதிலக்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஷாந்தா கம்லத், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தமயந்தி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் A.M.N.W. மெண்டிஸ், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் W.M. கருணாதாச, கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் சந்திரசிரி தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் K.A.S. தம்மிக்கா, களனி பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தம்மிக்க திசாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. சம்பத் ராஜபக்ஷ, களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி. S. பாஸ்கரன், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. சமிந்த G. கமகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.V.C. சந்திரசிரி, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. திலக் விஜேசுந்தர, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. ஓஷான் வெத்தகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.I.M. ரியாத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. ரஹீலா சியாத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.B.M. அம்ஜத், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. A. இல்முதீன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. R.A.N.M. ஜயசிங்க, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

கலாநிதி. சுரஞ்சித் குணசேகர, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. S.R. தீவீர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. சனத் முதலிகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. ஸ்ரீயானி குணரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. R. ரமேஷ், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. C.C. ஜயசுந்தர (நூலகர்), களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி. மாஹிம் மெண்டிஸ், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி. சமன் இலங்கரத்ன, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

கலாநிதி. ஷான் பண்டார, SDTI பல்கலைக்கழகம்

கலாநிதி. S.D. காமினி ஜயசூரிய, இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.

கலாநிதி. விந்தியா வீரவர்தன, களனி பல்கலைக்கழகம்.

கலாநிதி. விமலதம்ம தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. தம்மசிரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. G.C.L. கமகே, உறுகுணை பல்கலைக்கழகம்.

கலாநிதி. அத்துலசிரி சமரக்கோன், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி. P. சரவண குமார், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. S.R. தௌவீர், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. S. சுதர்ஷன், பேராதனை பல்கலைக்கழகம்.

கலாநிதி. M.M. ஃபிரோஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. ரணில் அபேசிங்க, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் தம்பர அமில தேரர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. R.M.G. கருணாரத்ன, களனி பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. D.D.R. டி சில்வா, களனி பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. ஃபாத்திமா ரஷீதா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. M.I. ஃபாத்திமா நிஹ்லா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. H.M. நிஜாம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. A.L.M.A. [illegible], தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.M.A. [illegible], தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. H.G.K.M. பண்டார, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. T.G.D. உதயகாந்தி, ரஜரட்டை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. W.A.N.D. விஜேசிங்க, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.D. பண்டார, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. நிஷாந்த ஹரிஸ்சந்திர, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. E.H.M. ஹீன்பண்டா, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. P. காயத்திரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. N.M.P. நெத்தாசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. D.L. ரணகல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. H.A.S.U. கீதாஞ்சலி, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.M. இஹ்ஜாஸ், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.L.M. ஹனீஃபா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.A.M. யசீர், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் சனத் குணவர்தன,

மூத்த விரிவுரையாளர் திரு. C. குமார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. N.M.A. ஜயசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S.C. குமார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S. சிவகாந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. T. திலீபன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. S. ஜீவசுதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. V. ஸ்ரீதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.A.M. யசீர், பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திருமதி. P. கலேஷீ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M.L.M. ஹனீஃபா, பேராதனை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. A. யோகராஜா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மூத்த விரிவுரையாளர் திரு. M. பிரகாசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. V. கமலசிரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. லும்னா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M.B. சஃப்னா சக்கி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. S. சந்திரகுமார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. ஃபர்விஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.J.M. ஹஸ்மி, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M.A. சுஜா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. அப்துல் ரசக், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M. ஷஹான், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. N. சுபராஜ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. T.L. சக்கீர் ஹுஸைன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.R.M. அன்சார், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M.M. மனோஜ் ஜயமால், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. சரத் பத்திராஜா, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. அரவிந்த பண்டார, கொழும்புப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. தில்ஹாற லக்ஷானி, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. J.M.S.B. செனவிரத்ன, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.M.C.H. அத்தனாயக்க, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A. ரிஸ்னா, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. N. சிவக்குமார, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. G. ஜயதீஸ்வரன், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.S. விஹாரகெதர, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. A.M.M. ரிக்காஸ், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. S.M. தமீம், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A.A. பானு, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. J. வலீத் அஹமத், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S.S. ஹேவாவாசம், ரஜரட்டை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.B. ஃபாத்திமா சஞ்சீத்தா, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. B.N.G. பெரேரா, உறுகுணை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. O.A.Y. சமத்யா, உறுகுணை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.D.W. கமலசிரி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. G.K. விதாபத்திரன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. M.A.B.S. மெதகெதர, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. V.M. ரில்வான், பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.M. ஷஹறன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. R.M.W. குலத்துங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. J.M.R.D. லக்மால், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ஹர்ஷாணி செவ்வந்தி ஹந்தெல்ல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. R.K. திசாநாயக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ரசிக்கா ஜயசிங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. H.H.M.P. மதுசங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் D. உபாலி தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. ரஞ்சனா கீதாலங்கார, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. A.G. மதுஷானி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் U. குணாநந்தன தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் K. பண்ணலோக்க தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் E. தீப்பா நந்த தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் M. நந்தலோக்க தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் E. மஹிந்த தேரர், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S.U.B. ஹேவாகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. K.K.T. உதயங்க, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. D.L. ரணகல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திருமதி. S. ப்ருந்தா, பேராதனை பல்கலைக்கழகம்.

விரிவுரையாளர் திரு. M. ஹரிச்சந்திர, உறுகுணை பல்கலைக்கழகம்.

மூத்த விரிவரையாளர் பிரசன்ன பெரேரா, பேராதனைப் பல்கலைக்கழகம்.


සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
**Sajith Premadasa**

(C-031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
29
06
1933



உதிர்வு
14
09
2024

# கதிரன் முருகேசு

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வேவரி வீதி, காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கில் வசித்தவருமான கதிரன் முருகேசு அவர்கள் 14.09.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - சின்னப்பெட்டை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான வீரன் - சின்னக்குட்டி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற பரிபூரணம் அவர்களின் அன்புக் கணவரும் மகாலிங்கம்(கனடா) காலஞ்சென்ற சற்குணதாஸ்(அச்சா - கனடா) மற்றும் ரவீந்திரதாஸ் (குஞ்சு - கனடா), ஜெகதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுரா(கனடா), ராஜினி(கெங்கா - கனடா), சுதர்சன், சுவேஸ்வரன்(லண்டன்), ஜெயக்குமார்(பிரான்ஸ்), ஜெகநாதராஜா(யம்பியன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜன்(கனடா), அனுஷா(பொண்ணு - கனடா), சுஜீவன்(கனடா), நிரோசன்(கனடா), விதுசன்(கனடா), அபிரா(கனடா), ஜெனிசா(கனடா), சுவேதிகா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் குமுதினி (லண்டன்), அமுதினி(பிரான்ஸ்), விஜயகுமார்(விசயன்), ஜெயக்குமார்(ஜெயா -கனடா), சசிகுமார் (கனடா) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் கதிரவேலு மகேஸ்வரியின் மைத்துனரும் காலஞ் சென்றவர்களான சீனித்தம்பி, கந்தப்பு, அருந்தவம்(தவம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.09.2024 நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்
076 645 8147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1967)

விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 274 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 02 புதன்கிழமை (18.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## ஜனாதிபதித் தேர்தலை

# உன்னிப்பாக கவனிக்கும் சர்வதேச சமூகம்

(கொழும்பு) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் உலக நாடுகளின் பார்வை இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளது.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஜனாதிபதித் 15

# ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் இன்று நள்ளிரவுடன் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலுக்கான வேட்பாளர் மற்றும் கட்சிகளின் பிரசாரப் பணிகள் இன்று நள்ளிரவுடன் நிறைவடைவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இன்று நள்ளிரவுக்குப் பின்னர் தேர்தல் பிரசாரம், பேரணி, துண்டுப்பிரசுர விநி 15

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முயற்சி

## மன்னாரில் ஜனாதிபதி ரணில்



(மன்னார்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முயற்சி செய்வேன் 15

# கட்சி பேதங்களின்றி அனைவருக்கும் பாதுகாப்பு

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்



(கொழும்பு)

கட்சி பேதங்களின்றி மனித நேயத்தின் அடிப்படையில் 15

## வல்லிபுரம் சென்ற வாகனம் விபத்து

15 பேர் காயம்

(சாவகச்சேரி)

வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம் நோக்கிப் பயணித்த மகேந்திரா வாகனம் விபத்துக்குள்ளானதில் 15 15


## புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு

அதிபர் உட்பட 6 ஆசிரியர்கள் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களை 15





(C-030)
பா.அரியநேத்திரன்
தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி




இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வாக்காளர்கள் எவ்வாறு சரியாக வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தல் சவாலானது. விருப்பு வாக்கின் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்ய வாய்ப்புகள் அதிகம். எனவே வாக்களிப்பு தொடர்பில் சரியான புரிதல் அவசியம்.

ஒருவேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்றால் அளிக்கப்படும் வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தவிர்த்து செல்லுபடியான வாக்குகளில் 50 வீதமான வாக்குகளைப் பெற வேண்டும்.

எந்தவொரு வேட்பாளரும் 50 வீதமான வாக்குகளை பெறாவிட்டால் முதலாவது. இரண்டாவது அதி கூடிய வாக்குகளை பெற்றவர்களை தெரிந்தெடுப்பர்.

ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களின் வாக்களிப்பு அட்டையில் உள்ள விருப்பு வாக்குகளுக்கு அமைய முதலிடங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு பகிர்வர். எனவே விருப்பு வாக்குகளே வெற்றியாளரை தீர்மானிக்கும் என்பதை நாம் உணர்ந்து வாக்களிப்போம்.




நீங்கள் ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க விரும்பினால், உங்களுக்கு விருப்பமான வேட்பாளரின் பெயருக்கு முன்னால் புள்ளடி (X) அடையாளம் இடுவதன் மூலம் உங்கள் வாக்கை பதிவு செய்யலாம்.

அல்லது



நீங்கள் இரண்டு வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உங்கள் தேர்வின் அடிப்படையில் 1 மற்றும் 2 என இலக்கமிட்டு வாக்கை பதிவு செய்யலாம்.

நீங்கள் மூன்று வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உங்கள் தேர்வின் அடிப்படையில் 1, 2 மற்றும் 3 என இலக்கமிட்டு வாக்கை பதிவு செய்யலாம்.



ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளருக்கு புள்ளடி(X) இடுதல் கூடாது.



ஒரு வேட்பாளருக்கு புள்ளடி (X) என்றும் மற்றைய வேட்பாளர்களுக்கு எண்களையும் இடுதல் கூடாது.

# வரிசை யுகம் உருவாக இடமளிக்காதீர்கள்!

## ரணில் வேண்டுகோள்

(கொழும்பு)

மீண்டும் வரிசை யுகம் உருவாக இடமளிக்க வேண்டாம் எனப் பொது மக்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற 'ரணிலால் இயலும்' பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஏனைய தலைவர்கள் முடியாது என்று கூறுகையில் நான் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். இந்நாட்டு மக்கள் உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு இன்றி தவிக்கும் போது சஜித்தோ, அநுரவோ கண்டு கொள்ளவில்லை.

மருந்து இல்லாமல் மக்கள் இறந்த போது அவர்கள் வருத்தப்படவில்லை. அவர்கள் தங்கள் அரசியல் இலக்குகளை அடைய மக்களை தியாகம் செய்ய விரும்பினர்.

மக்களைப் பற்றி சிந்திக்கும் அனைவரும் என்னுடன் இணைந்தனர். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்தோம். 2025 ஆம் ஆண்டில் மக்களின் வாழ்க்கைச் சுமையை இலகுவாக்க முடியும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப சுமார் 5 வருடங்கள் ஆகும். ஆனால் இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மிக விரைவாக மீட்டோம். நாட்டை கட்டியெழுப்பும் திட்டத்தின் மூன்றாம் ஆண்டு காலப் பகுதியில் அதன் வித்தியாசத்தை மக்கள் காணலாம். நாங்கள் இன்னும் தொங்கு பாலத்தில் இருக்கிறோம். இன்னும் கொஞ்ச தூரம் பயணிக்க வேண்டும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்தப் பயணத்தை நிரந்தரமாக்க வேண்டும்.

தப்பித்து ஓடிய தலைவர்களை நம்ப முடியாது. எனவே செப்ரெம்பர் 21 ஆம் திகதி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை தொடருமாறு கேட்டுக்கொள்கின்றேன்" இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)



யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தி தின விழா-2024 யாழ்.கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இந்திய கான்ஸரில் உள்ள இந்தி மாணவர்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டனர். (படம்: சிவசாந்தன்)

# அதிகரிக்கும் டெங்கு

## 4,742 பேர் வடக்கில் பாதிப்பு

## எச்சரிக்கும் சுகாதார அமைச்சு

(கொழும்பு)


இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 38,167 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதோடு மொத்த எண்ணிக்கை 9481 ஆகும்.


இதேவேளை கம்பஹா மாவட்டத்தில் 4,390 நோயாளர்களும் களுத்துறை மாவட்டத்தில் இருந்து 2,102 நோயாளர்களும் மற்றும் மேல் மாகாணத்தில் இருந்து 15,973 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் வட மாகாணத்தில் இருந்து 4742 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்களுடையதும் நாட்டினதும் எதிர்காலம் இன்னமும் பாதுகாப்பானதாக இல்லை



# ரணிலால் இயலும்

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
Ranil Wickremesinghe

2022இல் இலங்கை மிகப் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. உணவுக்கும், மருந்துக்கும், எரிபொருளுக்கும் மக்கள் நாட்கணக்கில் வரிசைகளில் நின்று துன்பப்பட்டதை அறிவேன். உங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற பெரிதும் சிரமப்பட்டீர்கள்.
எமது அன்புக்குரிய மக்களை வாழ வைப்பதற்காக உங்களுக்குத் தேவையான எரிபொருளைத் தொடர்ந்து வழங்கவும், எமது வங்கிக் கட்டமைப்பைப் பாதுகாக்கவும் வெளிநாட்டு நாடுகளுடன் கொடுக்கல் வாங்கில் செய்வதிலும் நான் சிரமம் பாராது பணியாற்றினேன். இது இலகுவான விடயமாக இருக்கவில்லை. நாம் இதற்கென இன்னும் பல பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது.
இந்தப் பணிகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை.
எமது எதிர்காலத்திற்காக தொடர்ச்சியாகக் கட்டியெழுப்பப்படும் ஸ்திரத் தன்மையையும் சுபீட்சத்தையும் நோக்கிப் பயணிக்க இயலும் என்பதை நான் அறிவேன்.

## என்னிடம் அதற்கான திட்டமொன்று உள்ளது

**அத்திட்டத்தின் வாயிலாக:**

1 என்னால் கடந்த ஈராண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பொருளாதார நவீனமயமாக்கல் நிகழ்ச்சியைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.
- அதனூடாக அரச பிரிவின் செயற்திறனை அதிகரித்தல்
- ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத் துறையை விரிவாக்குவதன் ஊடாக எமது பொருளாதாரத்தை விருத்தி செய்வதன் ஊடாக உங்கள் அனைவரது வாழ்க்கைச் செலவுகளையும் குறைத்தல்.
- ஏற்கனவே அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையும் எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

2 50,000 இளைஞர்களுக்குப் புதிய தொழில்களுக்கான பயிற்சியை அளிப்பதுடன் 2025ஆம் ஆண்டில் 100,000 புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்
- எமது விவசாயத்திற்கு அதிக கேள்வியை உருவாக்குதல்.
- அதிகளவிலான முதலீடுகளை நாட்டிற்குக் கொண்டுவந்து, அதனூடாக அனைத்து இலங்கையருக்கும் அதிக சம்பளத்தைப் பெறக் கூடிய உயர்மட்டத்திலான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.

3. வரிச்சுமையைக் குறைத்து உங்களுக்கு அதிக நிதிச் சுதந்திரத்தை வழங்குதல்

4 ஒவ்வொரு குடும்பத்தினதும் பெண்களைப் பொருளாதாரச் செயற்பாட்டில் பங்கேற்கச் செய்து குடும்பப் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்

5 குறைந்த வருமானம் பெறுவோருக்கு 15,000 ரூபாவுக்கான கொடுப்பனவும் காணிகள் மற்றும் அடுக்குமாடி வீடுகளில் வசிப்போருக்கு சொந்தமாக உரித்துரிமையைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படுவதைப் போன்றே தோட்டத்துறை ஊழியர்களுக்கும் சம்பளங்களை அதிகரித்து இலகு கடன் வசதிகளை வழங்குதல்.



நாம் வாழும் ஒரே நாடு இது. தவறான தீர்மானங்களை எடுத்து அதனை ஆபத்தில் வீழ்த்த வேண்டாம். கேஸ் சிலிண்டரின் முன்னால் நீங்கள் அளிக்கும் வாக்கினால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல என்னால் இயலும்



நாடு இருளிலா?
ஒளியிலா?
**தெரிவு உங்கள் வசம்**

அனுபவமோ, சர்வதேச தொடர்புகளோ ஏதுமற்ற ஒருவர் ஜனாதிபதியானால், உங்களுடையதும், பிள்ளைகளதும், உங்களுடைய குடும்பத்தினதும் நாட்டினதும் எதிர்காலம் ஸ்திரமற்றது. தற்செயலாகவேனும், அவ்வாறு நடந்தால் எமது வாழ்நாள் முழுவதும் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய பெரும் பாதிப்பு ஏற்படுவது நிச்சயம்.

அது எமது பொருளாதாரத்தையும் உங்களுடைய வாழ்க்கைச் சுமையையும் பெரிதும் பாதிக்கும்.

- 2022ஆம் ஆண்டில் நாம் முகங்கொடுத்த சிக்கலான நிலைமைகள் மீண்டும் ஏற்பட்டு எமது பாதுகாப்பான வாழ்க்கை ஆபத்தில் தள்ளப்படும்.
- உணவுப் பொருட்களின் விலை உயரும்.
- பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.
- வரிச் சுமை அதிகரிக்கும்.
- நடைமுறைச் சாத்தியமற்ற, நிறைவேற்ற முடியாத வெற்று வாக்குறுதிகள் இலங்கையை இருண்ட யுகத்திற்கு இட்டுச் செல்லும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் உங்களுக்குத் திடமான எதிர்காலம், குறைந்த வாழ்க்கைச் செலவு, வலுவான பொருளாதாரம் என்பவற்றை உருவாக்கும் திட்டத்துடன் சுபீட்சத்தை உதிக்கச் செய்யக் கூடிய வேட்பாளருக்கு உங்களுடைய வாக்கை வழங்குங்கள அனுபவமோ சர்வதேச தொடர்புகளோ இல்லாத ஒருவரிடம் நாட்டைக் கையளித்து உங்களுடைய வாழ்வாதாரத்தையோ உங்களது குடும்பத்தின் எதிர்காலத்தையோ ஆபத்தில் வீழ்த்தாதீர்கள்.

இலங்கைக்கு சுபீட்சமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை கடந்த இரண்டு வருடங்களில் என்னால் நிகழ்த்தப்பட்ட பெரும் புரட்சியை நினைவில் நிறுத்துங்கள். உங்கள் மனச்சாட்சியே அதற்கான சிறந்த சாட்சி. கனவுக் கோட்டைகளைக் கட்டும் வெற்று வார்த்தைகளுக்கோ பொய்களுக்கோ ஏமாறாதீர்கள். என் மீது நம்பிக்கை வையுங்கள். உங்களையும் நாட்டையும் விருத்தி செய்ய, முன்னோக்கிக் கொண்டு செல்ல என்னால் இயலும்.

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
Ranil Wickremesinghe

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதிகளுக்கு வாக்களிக்க தமிழர்கள் முட்டாள்களில்லை

## பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் தவிசாளர் நிரோஸ்



(யாழ்ப்பாணம்)

இலங்கை பொருளாதார ரீதியில் திவாலானமைக்கு தமிழ் மக்கள் மீதான யுத்த செலவீனமும் இனவாதத்தினால் தமிழ் மக்களை நாட்டின் அபிவிருத்தியில் பயன்படுத்தத் தவறியமையுமே காரணம் என்ற உண்மையை ஏற்று சிந்திக்காத செயற்படாத பேரினவாதத் தலைவர்களை நோக்கி நாம் இனியும் வாக்களிக்க முடியாது என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாக் ராஜா நிரோஸ் தெரிவித்தார்.

அச்சுவேலியில் இடம்பெற்ற தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்திய பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத் தேவை என வெற்றிவாய்ப்புக்காக போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் முண்டியடிக்கின்றனர்.

அவர்கள் தமிழ் மக்களிடத்தில் வாக்குகளைக் கேட்கும் போது, கடந்த காலத்தில் தமது அரசியல் நீரோட்டத்தில் எந்தளவு தூரம் இனவாத அணுகுமுறைக்குள் இருந்தனர் என்பதை சிந்தித்து நாட்டின் தலைவராவதற்கு அந்தஸ்தற்றவர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வெற்றி வாய்ப்புள்ளவராகக் கருதப்படும் வேட்பாளர்கள் இலங்கை பொருளாதார ரீதியில் நாடு திவாலான நிலைக்குச் சென்ற போது சிங்கள மக்களிடத்தில் வெளிப்படையாகவே இந்த மோசமான நிலைமை அத்தனைக்கும் சொந்த தாய் நாட்டில் ஒரு தேசிய இனமான தமிழ் மக்கள் மீது அரச இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடிய யுத்த செலவீனம் காரணம் என்பதை நாட்டிற்கு தெளிவுபடுத்தவில்லை.

சர்வதேசத்திடம் கடன் வாங்கச் சென்ற அரசு தமிழ் மக்கள் உலக அளவில் புலம்பெயர்வினால் பொருளாதார ரீதியில் முன்னிலையில் உள்ளனர் என்ற அடிப்படையில் அவர்களது முதலீடுகளையும் பங்களிப்பினையும் நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான உண்மையான முயற்சிகளை எடுக்கவில்லை.

தமிழ் மக்கள் அங்கீகரிக்கத்தக்க அரசியல் தீர்வும் தமிழ் மக்களுக்கு போர் மற்றும் போருக்கு பின் முன்னான சூழ்நிலைகளில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறல் இடம்பெற்று இருக்குமாயின் நாங்கள் ஒட்டுமொத்த இலங்கையராக முன்னேறியிருப்போம்.

இவற்றுக்கு இந்த பேரினவாத பௌத்த சிங்கள மேலாதிக்கத்தில் இருக்கக் கூடிய சிங்கள வேட்பாளர்கள் தயாரில்லை.

அந்நிலையில் நாம் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டோம். எமது பிரச்சினைகளை முன்னிறுத்தும் தமிழ் வேட்பாளருக்கே வாக்களிப்போம் என்பதில் உறுதியாக இருப்போம் என அவர் தெரிவித்தார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 220 | 200 | 160-250 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 180 | 180-200 | 350 |
| தக்காளி | 200 | 180 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 240 | 150 | 200 |
| கோவா | 250 | 280 | 300 | 280 | 320 |
| கரட் | 250 | 300 | 300 | 270 | 300 |
| பூசணி | 80 | 50 | 100 | 50 | 80 |
| புடோல் | 60 | 120 | 80 | 100 | 240 |
| வாழைக்காய் | 200 | 220 | 240 | 150-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 270 | 250 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 60 | 80 | 100 | 60-90 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 240 | 150 | 240 |
| பயற்றங்காய் | 350 | 300 | 100 | 150-200 | 300 |
| லீக்ஸ் | 320 | 320 | 320 | 300 | 350 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 50-80 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 450 | 420 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 200 | 200-300 | 320 |
| போஞ்சி | 250 | 350 | 350 | 310 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 140 | -- | -- | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 60 | 100 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 250-300 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 140 | 120 | 80-120 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | -- | 640 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 130 | 120 | 150 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 140 |


உ
ஓம் ஸ்ரீ சாய்ராம்



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் 100 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு

காயத்திரி மஹா மந்திர மஹா யக்ஞம்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் அரவணைப்பில் 50 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வரும் வேதவிற்பன்னர் ஸ்ரீ வேத நாராயணன் அவர்கள் இந்த மஹா யக்ஞத்தை நடாத்துவதற்காக பிரசாந்தி நிலையம் புட்டபர்த்தியிலிருந்து இலங்கை வருகிறார்.



காலம்:- 19.09.2024 வியாழக்கிழமை
நேரம்:- காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 வரை
இடம்:- ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்-யாழ் மத்தி. 15/12, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சமஸ்த லோகா சுகினோ பவந்து!

ஜெய் சாயிராம்

Sri Sathya Sai Overseas Organisation, Sri Lanka
(Affiliated with Sri Sathya Sai Global Council, Prasanthi Nilayam, Puttaparthi)
(ஸ்ரீ சத்ய சாயி அகில உலக பேரவை, பிரசாந்தி நிலையம், புட்டபர்த்தியுடன் இணைந்துள்ளது)

(1925)


## இராசிபலன்

18.09.2024
புரட்டாதி 02, புதன்கிழமை
பூரணை முற்பகல் 9.12 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 1.01 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
மஹாளயபட்ச ஆரம்பம்

சந்திராஷ்டமம்- பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்** தொழில் ரீதியாக புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கன்னி** குதூகலம் தரும் பயணமொன்று ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி கூடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மகரம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும்.

**கும்பம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

அளவற்ற செல்வமுடையவர்களுக்கு அளவற்ற தேவைகளும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்புறக்கணிப்பில் குதிக்கும்
## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**இன்று நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளிலும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் நோயாளிகளின் சிகிச்சைக்கு இடையூறு ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

இந்த மருத்துவப் பணிப் புறக்கணிப்பு காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பதுளை போதனா வைத்தியசாலையின் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தொடர்பில் முறையான முறைப்பாடு எதுவுமின்றி மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுக்காற்று விசாரணைக்கு எதிராகவே இந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் அனைத்து வைத்தியசாலைகளிலும் 7 நாட்களுக்கு கறுப்புக் கொடி கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் சமில் விஜேசிங்க மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மறுசீரமைப்பு செய்ய சுகாதார அமைச்சுக்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்குவதாகவும் அதற்குள் சாதகமான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், மத்திய குழுவின் கூட்டத்தின் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)


# தமிழ்ப் பொதுவேட்பாளர்
# பா.அரியநேத்திரன்
அவர்களை ஆதரித்து
# மாபெரும்
# பொதுக்கூட்டம்

இடம் : நல்லூர் சங்கிலியன் ( கிட்டு) பூங்கா
திகதி : 18.09.2024 (புதன் கிழமை)
நேரம் : பிற்பகல் 3.30 மணி


தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் அவர்களும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகளும், பல்கலைகழகச் சமூகத்தினரும் எழுச்சியுரை ஆற்றுவார்கள்.

கட்சிகளைக் கடந்து
தமிழினமாய்
அலை கடலெனத்
திரண்டு வருக!



(அ-0229)

மக்கள் புரட்சி வெல்லட்டும்!!



தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு


# மரண அறிவித்தல்

# திருமதி.சின்னம்மா மணியம்



தோற்றம்
10 - 06 - 1942

மறைவு
14 - 09 - 2024

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மணியம் சின்னம்மா (உரும்பிராய் மத்தி வேம்படி ஞானவைரவர் கோவில் 9 ஆம் திருவிழா உபயகாரரும் தொண்டரும்) அவர்கள் 14.09.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி-சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு-கனகம் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற மணியம் அவர்களின் பாசமிகு மனைவியும் அறிவழகி, இராணிமலர், ஞானசேகரன், காலஞ்சென்ற குணசேகரன் மற்றும் குகதாசன், செல்வமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், குலநாயகி, கவிதா, நந்தினி காலஞ்சென்ற தவராசா மற்றும் கந்தசாமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மீனகுமாரியின் பாசமிகு பெரிய தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இலச்சுமி, மார்க்கண்டு மற்றும் முருகையா (காவலன் திருமண சேவை இணைப்பாளர்-அல்வாய், கோப்பாய், தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசாத்தி, பேபி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பூமலர், ராணி, மல்லிகாதேவி காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், மார்க்கண்டு மற்றும் மகேந்திரம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சாமிவேல், கந்தையா, சுப்பையா ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.09.2024 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் தகனகிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மருதனார்மட வீதி,
விளாத்தியடி,
உரும்பிராய் வடக்கு.

தகவல் :
ப.முருகையா (பாசமிகு சகோதரன்).
தொ.பே : 077 663 0273

(2206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பெரியார் நினைவிடத்தில் நடிகர் விஜய் மரியாதை



(சென்னை)

சென்னையில் உள்ள பெரியார் நினைவிடத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், நடிகருமான விஜய் நேற்று செவ்வாய்க் கிழமை மரியாதை செலுத்தினார்.

தந்தை பெரியாரின் பிறந்த நாளையொட்டி, நேற்றுக் காலை அறிக்கை வெளியிட்டிருந்த விஜய், பெரியார் திடலுக்கு நேரில் சென்று அவரின் நினைவிடத்தில் வைக்கப்பட்டுள்ள படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தியுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கிய பிறகு முதல்முறையாக அரசியல் நிகழ்வில் விஜய் கலந்து கொண்டுள்ளார்.

விஜயுடன் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளும் பெரியார் படத்துக்கு மரியாதை செலுத்தினர்.

முன்னதாக நேற்றுக் காலை பெரியார் பிறந்த நாளையொட்டி அறிக்கை வெளியிட்ட நடிகர் விஜய், சமூகநீதிப் பாதையில் பயணிக்க உறுதியேற்போம் எனத் தெரிவித்திருந்தார். (நி)

## மிரட்டும் நிபா வைரஸ் மூடப்படும் பாடசாலைகள்!

- பொதுக் கூட்டங்களுக்குத் தடை
- முகக் கவசம் கட்டாயம்

(டில்லி)

**இந்தியா - கேரளாவில் மலப்புரத்தில் நிபா வைரஸ் பாதித்த 2ஆவது நபர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



கேரளாவில் மலப்புரத்தில் 23 வயது மாணவர் அண்மையில் உயிரிழந்த நிலையில் அவருக்கு நிபா வைரஸ் உறுதியானது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் நிபா வைரசால் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, வைரஸ் பரவாமல் தடுக்க மாநில அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பள்ளிகள், கல்லூரிகள், அங்கன்வாடிகள் மற்றும் திரையரங்குகள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுக் கூட்டங்களும் நடத்த தடை விதிக்கப்பட்டது. பொது மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது (நி)

## உணவுப் பொருட்களில் அதிகப்படியான இரசாயனங்கள்



(ஜெனிவா)

உலகளவில் உணவு உற்பத்தி, பதப்படுத்துதல், மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது அதிகப்படியான இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸர்லாந்து ஆய்வு நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் 3,600 இற்கும் மேற்பட்ட இரசாயனங்கள் மனித உடலில் கலப்பதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சில இரசாயனங்கள் பாரியளவிலான உடல் நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## ரயில் விபத்துக்களால் இதுவரை 748 பேர் உயிரிழப்பு



(டில்லி)

**“இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் இடம்பெற்ற ரயில் விபத்துக்களால் இதுவரை 748 பேர் உயிரிழந்துள்ளனர்”** என இந்திய ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சமூக செயற்பாட்டாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் வழங்கும் விதமாக ரயில்வே திணைக்களம் குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த அறிக்கையின் கடந்த 2023 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை நாடு முழுவதும் 40 ரயில் விபத்துகள் இடம்பெற்றுள்ளதாகவும், அதில் 318 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அதிகரிக்கும் விபத்துகளுக்கு ரயில்வே பணியிடங்கள் நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளதே காரணம் எனவும், அரசு வந்தே பாரத் சொகுசு ரயில்களை அதிகரிப்பதில் மட்டுமே கவனம் செலுத்தாமல் ரயில்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும், சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## இயற்கை எரிவாயு குழாயில் வெடிப்பு கொழுந்து விட்டெரிந்த தீ!



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தின் ஹவுஸ்டன் என்ற பகுதியில் மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்த இயற்கை எரிவாயு குழாய் திடீரென வெடித்தது.

இதன் காரணமாக வெடிப்பு ஏற்பட்ட இடத்தில் தீ பற்றி எரிந்தது. வானுயரத்திற்கு தீ கொழுந்து விட்டு எரிந்ததால், பாதுகாப்பு காரணத்திற்காக அப்பகுதி மக்கள் அவசர கதியில் வெளியேற்றப்பட்டனர்.

மின்சாரமும் அப்பகுதியில் நிறுத்தப்பட்டது. தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வாகனத்தில் வந்த வீரர்களும், தீயின் அதிகளவு வெப்பம் காரணமாகச் சிரமப்பட்டனர். இருப்பினும் ஒரு மணி நேர போராட்டத்திற்கு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எரிவாயு குழாய் சரி செய்யும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. வெடிப்புக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அதிஷ்டவசமாக இந்த விபத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை.(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ஈரானுக்கு எதிரான தடைகளை விரிவுபடுத்திய கனடா



(ஒட்டாவா)

பயங்கரவாதம் மற்றும் மனித உரிமை மீறல்களுக்காக ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை விரிவுபடுத்துவதாக கனேடிய அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக் கிழமை அறிவித்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் ஈரானில் சிரேஷ்ட அரசாங்க அதிகாரியாகப் பணியாற்றிய எவரும் கனடாவிற்குள் நுழைவதை இந்த புதிய உத்தரவு தடுக்கின்றது.

அத்துடன், குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 35(1)(b) இன் கீழ் 2022 நவம்பரில் நடைமுறைப் படுத்தப்பட்ட ஈரானிய ஆட்சிக்கு எதிரான முந்தைய தடைகளை இந்த நடவடிக்கை மேம்படுத்துகின்றது.

ஈரானுக்கும் கனடாவுக்கும் இடையிலான உறவுகள் பல தசாப்தங்களாக இழுபறியில் உள்ளன. கனடா ஆரம்பத்தில் 2012 இல் ஈரானை பயங்கரவாதத்தின் அரச ஆதரவாளராக அறிவித்ததுடன், ஒட்டாவா அன்று முதல் தெஹ்ரானுடான இராஜதந்திர உறவுகளையும் துண்டித்திருந்தது.

2024 ஜூன் 19 அன்று இஸ்லாமிய புரட்சிகர காவலர் படையை (IRGC) ஒரு பயங்கரவாத அமைப்பாக கனடா பட்டியலிட்டதுடன், கனேடிய நிதி நிறுவனங்கள், IRGC உறுப்பினர்களின் சொத்துக்களை முடக்க வேண்டும் என வலியுறுத்தியது.

ஈரானுக்கு எதிரான கனேடியத் தடைகள் 2010 இல் நடைமுறைப்படுத்தப் பட்டதிலிருந்து படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

அதன் பின்னர், சிறப்புப் பொருளாதார நடவடிக்கைகள் சட்டம் (SEMA)மற்றும் ஊழலால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு அதிகாரிகளுக்கான நீதிச் சட்டம் (JVCFOA) ஆகியவற்றின் கீழ் ஈரானிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களைக் குறிவைத்து கனடா பல தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உலகின் வயதான பூனை இங்கிலாந்தில் உயிரிழந்தது



(லண்டன்)

உலகின் மிக வயதான பூனை என அறியப்பட்ட இங்கிலாந்தைச் சேர்ந்த ரோஸி என்ற பூனை நேற்று முன்தினம் உயிரிழந்தது.

கடந்த ஜூன் 1 ஆம் திகதி ரோஸி தனது 33 ஆவது பிறந்தநாளை கொண்டாடியது. அத்துடன், உலகின் மிக வயதான பூனை என்ற பெருமையோடு வலம் வந்தது.

1991 இல் பிறந்த ரோஸி வயது மூப்பு காரணமாக இங்கிலாந்தில் உள்ள நோர்விச் நகரில் உள்ள அவரது உரிமையாளரின் வீட்டில் உயிரிழந்தது.

33 ஆண்டுகள் வாழ்ந்த ரோஸியின் வாழ்நாளை மனித வாழ்நாளோடு ஒப்பிட்டால் இது 152 ஆண்டுகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## அணுஆயுத ரகசியங்களை ஈரானுக்கு வழங்கியதா ரஷ்யா?

### அமெரிக்கா, பிரிட்டன் அச்சம்

(வோஷிங்டன்)

**உக்ரைனுக்கு எதிரான போருக்கு ஆயுதங்களை வழங்கிய ஈரானுக்கு நன்றிக்கடனாக ரஷ்யா அணுஆயுத ரகசியங்களை வழங்கி இருக்கலாம் என அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் அச்சம் தெரிவித்து உள்ளன.**



சர்வதேச தடைகள் காரணமாகக் கடந்த 2015 ஆம் ஆண்டு அணுஆயுதங்கள் உற்பத்தி செய்வதை நிறுத்த அமெரிக்கா உடன் ஈரான் ஒப்பந்தம் போட்டது. ஆனால், 2018ஆம் ஆண்டு ட்ரம்ப் ஆட்சி காலத்தில் அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. இதன் பிறகு அணுஆயுதங்களை தயாரிப்பதில் ஈரான் மும்முரம் காட்டி வருகிறது. இதற்கு தேவையான யுரேனியத்தை சேமித்து வைத்து உள்ளது. இதன் மூலம் அணுஆயுதங்களை ஈரான் தயாரிக்க முடியும் என மேற்கத்தேய நாடுகள் கவலை கொண்டுள்ளன.

இந்நிலையில், உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யாவிற்கு ஆயுதங்களை வழங்கி ஈரான் உதவி செய்துள்ளது. இதற்காக அந்நாடு மீது புதிய பொருளாதார தடைகளை விதிக்கப் போவதாக மேற்கத்தேய நாடுகள் எச்சரித்துள்ளன. ஆனால், இது குறித்து ரஷ்யா எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.

ஈரானுக்கு நன்றி செலுத்தும் விதமாக, அணு குண்டு தயாரிக்கத் தேவையான அணுஆயுத ரகசியங்களை ரஷ்யா பகிர்ந்து இருக்கலாம் என மேற்கத்தேய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக அமெரிக்கா ஜனாதிபதி பைடன் மற்றும் பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மர் சந்தித்த போது, அணுகுண்டு தயாரிக்க வேண்டும் என நீண்ட கால லட்சியத்துடன் யுரேனியத்தை சேமித்து வைத்து வரும் ஈரானுடன், ரஷ்யா உறவை பலப்படுத்தி வருவதற்கு கவலை தெரிவித்தனர். அணுஆயுத ரகசியங்களை ரஷ்யா பகிர்ந்தது குறித்தும் விவாதித்தனர்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கன் கூறும் போது, "ஈரான் கேட்டு வரும் அணு ஆயுத ரகசியங்களை ரஷ்யா வழங்கி வருகிறது" எனக் குற்றம் சாட்டினார். உக்ரைன் மீதான தாக்குதலுக்கு ஈரான் மட்டுமின்றி, வட கொரியாவும் ரஷ்யாவிற்கு ஆயுதங்களை வழங்கியுள்ளது.

சீனா ஆயுதங்களை வழங்காவிட்டாலும், அதனை தயாரிக்க தேவையான தொழில் நுட்ப ரீதியான உதவிகள், கருவிகள் உள்ளிட்டவற்றை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (நி)

## பழங்குடிக் குழுக்களிடையே பப்புவா நியூகினியாவில் மோதல்

### இதுவரை 30 பேர் உயிரிழப்பு

(கன்பெரா)



பப்புவா நியூகினியாவில் சர்ச்சைக்குரிய தங்கச் சுரங்கமொன்று தொடர்பாக இரண்டு பழங்குடிக் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதியில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பாதுகாப்பு தரப்பினருக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஆணையாளர் டேவிட் மன் னிங் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் குறித்த பகுதியில் மதுபான விற்பனைக்குக் கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், இரவு நேர ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தவறான காணொளிகளை பகிர்ந்தால் சட்டம் பாயும்

(கொழும்பு)

அரசியல் ஆதாயத்திற்காக 2022 ஆம் ஆண்டு அரகலய போராட்டத்தின் போது வன்முறை நிகழ்வுகள் தொடர்பான தவறான காணொளிகளை பகிரும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகில் வாகன சோதனைகள் மற்றும் 2022 மே 9 ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காட்சிகள் என தீவின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களின் காணொளிகள் சமூக ஊடகங்களில் மீளப் பரப்பப்படுவது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீடியோக்கள் கடந்த கால நிகழ்வுகளை நடப்பு நிகழ்வுகளாகக் காட்டி தவறான கதையை உருவாக்கி, பொதுமக்களை தவறாக வழிநடத்தி, சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபோன்ற உறுதியற்ற வீடியோக்களை சமூக ஊடகங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு பொது மக்களை வலியுறுத்தினர். மேலும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் பதிவிடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)


## ஐசுபி உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வதற்கு முகவர் தேவை

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஐசுபி பழரசத் தொழிற்சாலையில் உற்பத்தி செயயப்படும் (மாம்பழயூஸ், நெல்லிக்கோடியல், ஜாம், மிக்ஸ்புருட், கோடியல் போன்ற) பொருட்களை நாடு முழுவதும் விற்பனை செய்வதற்காக முகவர் தேவைப்படுகிறார்கள்.

விண்ணப்பங்களை **பொதுமுகாமையாளர், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம்.** எனும் முகவரிக்கு 31.10.2024இற்கு முன் சமர்ப்பிக்கவும். ஆர்வமுள்ளவர்கள் மேலதிக விபரங்களிற்கு மேற்படி முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்,**
**சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)**
**கே.கே.எஸ்.வீதி,சுன்னாகம்.**
**021 224 3627**
(c-1204)


# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...



தமிழர்களே! தமிழர்களே! என்ன கடுமையாக் யோசிக்கின்றீர்கள். அவர் வருவாரா? இவர் வருவாரா? என்று தானே. அவர் வந்தாலென்ன இவர் வந்தாலென்ன எவர் வந்தாலென்ன புதிதாக யாரும் வருகின்றார்களா? இல்லை அதனால் எங்களுக்கு எவர் வருவாரோ அவர் தான் வந்திருக்கின்றேன். எனவே நான் கூறுவதை இருந்து அமைதியாக கேளுங்கள்.

சொல்லெணாத் துன்பங்களுக்கு ஆளாகி வாழ்வா? சாவா? என்று ஏங்கித் தவித்த தமிழ் மக்களே! உங்கள் எல்லோருக்கும் ஆறுதல் கூறவேண்டியது எனது முதற் கடமை. அதனால் நான் தரும் ஆறுதல் செய்தி உங்கள் எல்லோருக்கும் மன அமைதியை உண்டாக்கி ஆறுதல் அளிக்கட்டும் இக்கொடிய யுத்தத்தினால் கணவனை இழந்து, மனைவியை இழந்து, பிள்ளைகளை இழந்தது மட்டுமல்லாமல் அங்கங்களையும் இழந்து கொடிய துன்பத்தை அனுபவித்தீர்கள்.

எங்கள் சோகக்கதைகள் சொல்லி அடங்குமா? சொல்லி முடியுமா? இவையெல்லாம் உங்கள் கர்மாக்களின் பலாபலன்கள். இருந்தும் எனது ஆறுதற் செய்தி ஆறுதற்படுத்தட்டும். இருட்டினுள் வாழும் உயிர்களுக்கு இறைவன் தானே கைவிளக்கு. உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி இருக்கவும் இடமின்றி சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்தீர்கள்.

இத்தனைக்கும் நானும் உங்களுடன் தான் இருந்தேன். யார் யாருக்கு எந்தெந்த வடிவம் தாங்க வேண்டுமோ அந்தந்த வடிவம் தாங்கி அவரவர் துயர் துடைத்தேன். இவ்வேளை என்னைத் தெரியாவிட்டாலும் எனது நாமத்தை அழைத்தீர்களே அதுவே எனக்கு போதும். உங்கள் எல்லோரையும் காப்பாற்றுவதற்காகவே பல வருடங்களாக எனது தெய்வீகத்தை பிரசுரம் மூலம் தெரியப்படுத்தி அதனை நடை முறைப்படுத்திக் கொண்டும் இருப்பவன் இப்போது என்னைத் தெரிகின்றது தானே! ஆமாம் நான் தான் அந்த இருட்டினுள் தெரிந்த விளக்காகிய இறைவன்.

அவனின்றி ஓர் அணுவும் அசைய முடியாது என்று கூறுவார்களே அவனே தான் நான். நான் மேலும் என்னைப் பற்றிக் கூறுவது என்றால் அன்றும் இன்றும் கண்ணைக் கொத்தியவன். இப்படியான திருவிளையாடல்களை நடாத்திக் கொண்டிருக்கும் சர்வவல்லமை பொருந்திய உங்கள் ஈசுர விநாயகன் தான் நான். எனது நாமத்தை தெரியதோர் இங்கிருக்கவே முடியாது. நடந்தது, நடப்பது, நடக்கப் போவது இவை யாவும் எனது திருவிளையாடல்களே என்னை நம்பியவர்களை ஒரு போதும் கைவிடமாட்டேன். அத்துடன் எனக்கு எம்மதமும் சம்மதம்.

நம்பிக்கையில்லாவிட்டால் எனது ஆலயத்திற்கு வந்து பாருங்கள். எம்மதமும் சம்மதம் என்ற கோபுரமே கட்டப்பட்டுள்ளது. எனவே நடந்த வற்றையெல்லாம் மறந்து ஆறு மனமே ஆறு இந்த ஈசுர விநாயகன் கட்டளை ஆறு. அன்பிற்கு என்றும் நான் அடிமை... எனது ஊஞ்சல் பாட்டைப் பாடி நீங்கள் எல்லோரும் உங்கள் அன்பை வெளிப்படுத்தினீர்கள் அதுவே எனக்குப் போதும். அதனால் மீண்டும் வந்திருக்கி றேன். தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்துத்தான் இருப்பேன். **"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**

நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக அடியவனுக்கு தர்சனங்களை காட்டிவிட்டு எப்போது நடக்கும் என்பதைக் காட்டமாட்டேன். அதனால் அவனும் மக்களோடு போரட வேண்டிய நிலை வந்துவிட்டது. காரணம்

(1). அடியவனிடமே எல்லாவற்றையும் அறிந்து விடுவீர்கள். என்னை யார் நினைப்பது நான் மறைக்கப்பட்டுவிடுவேன்

(2). அடியவனும் முடியும் காலம் தெரிந்தால் என் தெய்வீகத்தை கைவிட்டு விடுவான். இத்தனை வருடங்களா? ஈசுர விநாயகரை நீர் காட்டுகின்ற நேரம் காட்டும் என்னை விட்டுவிடும் என்பான்.

(3). மக்கள் எல்லோருக்கும் நான் தான் நாட்டுப் பிரச்சினைக்கு உரியவன் என்பதை உணரவைத்து அடியவன் என்னை தஞ்சம் என்று அடைந்தது போல் எல்லோருக்கும் அந்த நிலை வர வேண்டும். என்னுடைய தர்சனங்களை எல்லாம் நம்பவைக்க வேண்டும் என்று நடைமுறையில் நிரூபித்துக் கொண்டுபோனேன். காலமும் நீண்டது கர்மாவும் முடிந்தது.

(4). அடியவன் என்னிடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கின்றானா என்று சோதித்துப் பார்த்தேன். காலம் கூடக் கூட நம்பிக்கை கூடியதே ஒழிய குறையவே இல்லை. அதனால் அவனுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன்.

(5). மனிதன் எப்படித் தான் முன்னேறிச் சாதனைப் படைத்தாலும் இறைவனுக்கு சமனாக வரமுடியாது என்பதை உணர்த்துவதற்கான காரணம் மனிதனைப் படைத்தவன் இறைவன் என்பதை மனிதன் மறக்கக் கூடாது.

**என் இனிய நெஞ்சங்களே!**

ஈசுர விநாயகர் கூறி அருளியதைக் கேட்டீர்கள் தானே! அவருக்குத் தான் தெரியும் அந்த ஆரம்பமும் அதன் முடிவும். அட யாருக்கம்மா புரியும் அவன் வேடிக்கையும் அதன் விளைவும் **"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"** என்றவாறு இறைவன் அன்பிற்கு அடிமையாகி விடுவார். (14.09.2024) வலம்புரிப் பத்திரிகையிலே நான் பட்ட அனுபவங்கள் சிலவற்றை குறிப்பிட்டு அன்று மக்களை சிரிக்க வைத்தது மட்டுமல்ல இன்றைய மக்களையும் சிரிக்க வைத்த சினிமாப் பாடல்களையும் அறியத் தந்திருந்தேன். காரணம் தமிழ் மக்களின் ஆட்சி திறப்புக் கிடைத்த சந்தோஷத்தை எல்லா மக்களும் கொண்டாட வேண்டும் என்பதாகும்.

ஈசுர விநாயகர் ஊஞ்சல் ஆடியதன் பலாபலனைப் பார்த்தீர்களா? வடக்கே கொண்டாட்டம் தெற்கே திண்டாட்டம். தமிழ் மக்கள் அனைவருக்கும் அடியேன் கூறுவதாவது, திறப்பு தந்தருளிவிட்டார். அதனால் விரைவாக அதற்குரிய சந்தர்ப்பம், சூழ்நிலைகளை உருவாக்கி முடித்துத் தருவார். தீர்த்துத் தான் இருப்பேன் என்றவர் மிகவிரைவாக செய்யப் போகிறார் என்பதை நம்புங்கள்.

**என் அன்பு உள்ளங்களே!**

கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்ட கதையே இனிவரும் தேர்தல்கள் என்று (24.07.2024) வலம்புரிப் பத்திரிகையிலே செய்தி வெளியிட்டு இருந்தேன்.

மேன்மை தாங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு எனது 33 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப்பாதையிலே தற்போதைய ஜனாதிபதித் தேர்தலை பிற்போட்டு தமிழர் நீண்ட கால இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணுமாறு ஈசுர விநாயகர் கூறியருளுகின்றார். அதனைத் தாங்கள் கவனத்திற்கு அறியத்தருகின் றேன். தவறினால் நாடு பறிபோவது நிச்சயம். அதனால் தாங்கள் ஈசுர விநாயகரின் கூற்றை அவமதிக்காது செயற்படவும் என்று கடிதம் அனுப்பியிருந்தேன். இக் கடிதம் ஜனாதிபதி அவர்களுக்கு கிடைத்தமை பற்றி பதிலும் அடியேனுக்கு கிடைத்துள்ளது.

நான் ஒரு ஆன்மீகவாதி அறிவிக்க வேண்டியது எனது கடமை. ஈசுர விநாயகரே யாவற்றையும் நிறைவேற்றி வைப்பார். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் இவ்வேளையிலே ஜனாதிபதி வேட்பாளர்கள் சிங்கள மக்கள், சிங்கள அரசியல் வாதிகள், அரசியல் தலைவர்கள் போன்றோரின் மனோநிலை, தேர்தல் கொள்ளைகள், தேர்தல் பிரசாரங்கள் மூலம் ஈசுர விநாயகரே தமிழ் மக்களுக்கு சிங்களவரின் அரசியல் சித்து விளையாட்டுக்களை வெளிப்படுத்தி விட்டார். இவ்வளவும் போதும் தானே!

**ஈசுர விநாயகரின் அன்றைய திருவாக்குகள்..**

(1). எமது பிரச்சினை பேசித் தீர்க்கும் பிரச்சினையன்று நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து வந்த பின்னரே தெய்வ நிர்பந்தங்களால் மட்டும் தீரும் தன்மையது.

(2). தற்போதைய அரசியல் நிலைப்பாட்டில் சிங்கள அரசியல் தலைவர்கள் எவரையும் நம்புவதற்கு தமிழர்கள் தயாரில்லை.

(3).தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தருபவர் ஆண் அல்ல பெண்னே.

(4). ஐயா கண்ட தரிசனங்களில் மிகவும் முக்கியமானது நாட்டில் இதுவரை நடைபெறாத ஓர் பெரும் அரசியல் சண்டை.

(5). நாடு பறிபோகுமாப்போல ஒரு நிலை வரும்.

(6). நிர்பந்தத்தில் தான் சமாதானமான அரசியல் தீர்வு கிடைக்கும்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டில் நெருங்கிவரும் தேர்தல் களமே மேலே குறிப்பிட்ட விடயதானங்களிற்கு வழிசமைக்கும் என்பதை உணர்வோமாக.

இன்னும் ஈசுர விநாயகர் அருட் குரல் (11.11.2019) துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டவாறு பழைய சிங்கள அரசியல் கலாசாரம் மாற்றப்படவில்லை, டிஜிற்றல் அரசியல் அமைப்பு கொண்டுவரப்படவில்லை, டிஜிற்றல் ஒரு கட்சி முறையே கொண்டு வந்து நீண்ட கால தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. டிஜிற்றல் உலகில் வாழ்ந்து கொண்டு காலத்திற்கேற்ற டிஜிற்றல் அரசியலை அறிமுகப்படுத்த முடியவில்லை போன்ற குற்றங்களுக்கு இலங்கை அரசியல்வாதிகள் ஆளாகி விட்டனர். இது காரணமாகவே ஈசுர விநாயகர் நாட்டின் அரசியலையே குழப்பி விட்டார். மக்களோ செய்வது அறியாது திணறுகின்றனர். அரசியல்வாதிகளோ மோதல் அரசியலை உருவாக்குகின்றனர்.

ஈசுர விநாயகரோ பல கட்சி ஆட்சி முறை வேண்டாம் என்று ஒவ்வொரு கட்சியையும் சிதற உடைக்கின்றார். இத்தேர்தல் பல கட்சி ஆட்சி முறையை இல்லாமல் பண்ணும். ஈசுர விநாயகரோ விடப் போவதில்லை. எமது நீண்ட தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு தந்தே ஆவார்.

எமது இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் மட்டுமே அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும். அரசியலில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டால் மட்டுமே பொருளாதார ஸ்திரம் ஏற்படும். பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். எனவே தேர்தல் வாக்குறுதிகளை மக்கள் நம்ப வேண்டாம்.

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீகவாதியும், சந்ததிப் பூசகரும், பரியாலகரும்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் வாக்குகளை சிதறடிக்கவே சுமந்திரனின் ஆதரவு நாடகம்

## ஊடக சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கும் விடயமானது ரணில் விக்கி ரமசிங்கவிற்கு அதிகளவான வாக்குகளை சேர்ப்பதற்கான சதி நடவடிக்கை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரி வித்துள்ளார்.


கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கட்சிகள் சஜித் பிரேமதாசவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள நிலை சிங்கள மக்கள் மத்தியில் சஜித்திற்கான ஆதரவினை குறைக்கும் நட வடிக்கையாகும்.

சஜித் பிரேமதாச சிங்கள தேசிய வாதத்திற்கு நேர்மை யாக நடந்து கொள்வார் என னும் நிலைப்பாட்டில் குழப்பத் தினை ஏற்படுத்தி அவரது தென்னிலங்கை வாக்கு களை ரணிலின் பக்கம் திரும்பும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

சஜித் பிரேமதாசவினை ஆதரிக்கும் வடக்கு கிழக்கி னைப் பிரதிநிதித்துவப் படுத் தும் தமிழ் அரசியல் வாதி களுக்கு ஆதரவு கிடையாது. எனினும் இந்த நிலைப் பாட்டில் தமிழ் மக்கள் மத்தி யில் ஒரு குழப் பத்தி னையும் ஏற்படுத்தப் போவதில்லை.

ஆனால் தென்னிலங்கை யில் குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் அரசியல்



வாதிகளின் நிலைப்பாடு குழப்பத்தினை ஏற்படுத்தும்.

ஆகவே நாம் இவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் இன்று தமிழ்த் தேசியத்திற்கு நேர்மையாக கொடுக்கக்கூடிய ஒரு நேர்மை யான வழி தேர்தலைப் பகிஷ் கரிப்பது மட்டுமே.

எனவே 2024 ஆம் ஆண் டுக்கான ஜனாதிபதித் தேர் தலை புறக்கணிப்பதே எமது கட்சியின் நிலைப்பாடு என்றும் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் மேலும் சுட்டிக்காட்டி னார். (நி)

## கேள்வி அறிவித்தல்

## சபைநிதி, முத்திரைத் தீர்வை நிதி வேலைத்திட்டம்-2024

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(i)/(ii) and (iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024 ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படு வதுடன், வடமாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V, இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 18.09.2024 ஆம் திகதியிலிருந்து 01.10.2024 ஆம்திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 02.10.2024 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2024.09.25 ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.
10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT) நீங்கலாக | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியா கும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியா கும் காலம் |
| 01 | யாவில் வீதி புனரமைத்தல் ,மாகியப்பிட்டி (NP/14/41(16)/W/CF/2024/27 | 2.37 | 63 நாட்கள் | C8 and C7 (வீதி | 63 நாட்கள் | 23,800.00 | 31.12.2024 |
| 02 | தோலோடை வீதி புனரமைத்தல்,பெரியவிளான் NP/14/41(16)/W/CF/2024/28 | 2.77 | 63 நா'கள் | C8 and C7 (வீதி) | 63 நா'கள் | 27,800.00 | 31.12.2024 |
| 03 | i)மதவடி (வெள்ளவாய்க்கால்) வீதி புனரமைத்தல் கட்டம் I, பண்டத்தரிப்பு NP/14/41(16)/W/CF/2024/29 | 6.68 | 63 நாட்கள் | C7 and C6 (வீதி) | 77 நாட்கள் | 66,800.00 | 14.01.2025 |
| 04 | உந்துசாந்தை வீதி புனரமைத்தல், கட்டம் I, சில்லாலை தெற்கு NP/14/41(16)/W/Add.Stampduty/2024/30 | 2.14 | 63 நா'கள் | C8 and C7 (வீதி) | 63 நா'கள் | 21,200.00 | 31.12.2024 |
| 05 | மானிப்பாய் பட்டினஉபஅலுவலகம் புனரமைப்பு NP/14/41(16)/W/CF/2024/31 | 3.09 | 63 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 30,900.00 | 31.12.2024 |
| 06 | தலைமையலுவலக கட்டடம் புனரமைப்பு,மானிப்பாய் NP/14/41(16)/W/CF/2024/32 | 4.96 | 63 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 49,600.00 | 31.12.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**
**18.09.2024.**

(C-1205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசர அவசரமாக அகற்றப்பட்ட

# மன்னார் சோதனைச் சாவடி



(மன்னார்)

மன்னார் பிரதான பாலத் தில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் மற்றும் சோத னைச் சாவடிகள் நேற்று செவ் வாய்க் கிழமை காலை அவ சர அவசரமாக அகற்றப்பட் டுள்ளது.

முன்னதாகவே ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க வின் மன்னார் வருகையின் போது குறித்த சோதனைச் சாவடி அகற்றப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத் தப்பட்டி ருந்தன.

இருப்பினும் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு ஒரு வார காலத்தின் பின் மீண்டும் சோதனைச் சாவடி மற்றும் வீதித் தடைகள் பிரதான பாலத்தில் அமைக்கப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் ஜனாதிப தித் தேர்தலை ஒட்டி பிரசார நடவடிக்கைகளுக்காக ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க மன்னார் மாவட்டத்திற்கு வருகை தர உள்ள நிலை யில் பிரதான பாலத்தின் அருகில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் மற்றும் சோதனைச் சாவடி கள் அடை யாளம் தெரியாத வகையில் வீதிகளில் இருந்து அகற்றப்பட் டுள்ளது. (நி-285)

# தேர்தல் ஏற்பாடுகள் தீவிரம் முன்னாயத்த கள ஆய்வு



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்கெண் ணும் நிலையமான யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி யில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுங்கமைப்புக் கள் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிப ரும் தெரிவத்தாட்சி அலு வல ருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் கள ஆய்வு செய்யப்பட்டது.

இக் கள ஆய்வில் உத வித் தேர்தல்கள் ஆணை யாளர் அமல்ராஜ், வட மாகாணப் பிர திப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஜே. ஹாலிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர், பொலிஸ் பொறுப்ப திகாரிகள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோர் பங்கு பற்றி னார்கள் (நி)

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 583





சபையிலிருந்து தாம் புறப்படும் சமயத்தில் நிமித்தக்காரன் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு தயங்கித் தயங்கி நிற்பதை மதுராந்தகர் கவனித்தார். அவனைத் தம்முடன் வரும்படி சமிக்ஞையினால் கட்டளையிட்டார். வந்தியத்தேவனுடைய கண்கள் இளவரசியின் முகத்தைப் பார்க்கவும், நயன பாஷையினால் செய்தி உணர்த்தவும் ஆர்வம் கொண்டிருந்தன. ஆனால், இளவரசி மீண்டும் அவனைத் திரும்பிக்கூடப் பாராமல் பெரிய மகாராணியுடன் போய்விட்டாள்.

இது என்ன? தன்னை இளவரசி அடியோடு மறந்துவிட்டாரா? அப்படித்தான் இருக்க வேண்டும்.

எத்தனையோ ஆயிரமாயிரம் பேரை அவர் தினம் தினம் பார்த்து வருகிறார். ஒரு தடவை இரண்டு தடவை பார்த்த தன்னுடைய முகம் அவர் மனத்தில் எவ்விதம் நினைவிருக்கும்? நான் பைத்தியக்காரன் இரவும் பகலும் எத்தனை எத்தனையோ விபரீத சம்பவங்கள், அபாயங்களிடையிலும் இளவரசியின் திருமுகத்தையே நினைத்துக் கொண்டிருந்தேன். இளவரசி எதற்காக என்னை நினைத்திருக்க வேண்டும்? தேனீ தேனை விரும்பி மலரைச் சுற்றிச்சுற்றி வருகிறது. மலருக்குத் தேனீயைப் பற்றி என்ன கவலை? மலர் சூரியனைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருக்கிறது. குந்தவையின் முகமலரை விரியச்செய்யும் சூரியதேவன் யாரோ?

ஆயினும் தன்னை எதற்காக அனுப்பினாரோ, அந்தச் செய்தியைத் தெரிந்து கொள்வதிலே கூட அவருக்கு ஆர்வம் இல்லாமலா போய்விடும்? தனக்கு முன்னாலே யாராவது வந்து சொல்லியிருப்பார்களோ? அது எப்படி முடியும்? இல்லை, இல்லை! அவர் ஏதோ கவலையில் ஆழ்ந்திருக்கிறார் என்பதையும் அவர் முகம் நன்றாகக் காட்டியது. தன்னை அடையாளம் கண்டு கொள்ளாததுதான் காரணமாயிருக்க வேண்டும். அந்தரங்க ஓலை எடுத்துக்கொண்டு இலங்கை சென்ற தூதன், மதுராந்தகத் தேவரின் பரிவாரங்களில் ஒருவனாகச் சபைக்கு வந்தால் எப்படி அடையாளம் கண்டுபிடித்துத் தெரிந்து கொள்ள முடியும்? ஆகா! இளவரசியைச் சந்தித்து அந்நகரில் நுழைவதற்குத் தான் கையாண்ட யுத்திகளைப் பற்றிச் சொல்லும் போது அவர் எவ்வளவு ஆச்சரியம் அடைவார்? ஆனால் சந்திப்பது எப்படி? செய்தி சொல்லி அனுப்புவது எப்படி?

"நிமித்தக்காரா! என்ன யோசனையில் ஆழ்ந்திருக்கிறாய்?" என்ற மதுராந்தகரின் குரலைக் கேட்டு வந்தியத்தேவன் திடுக்கிட்டான். அதற்குள்ளே அவர்கள் அரண்மனையில் மதுராந்தகத் தேவருடைய தனி அறைக்கு வந்திருந்தார்கள்.

அந்த நாளில் சோதிடர்கள், ஆரூடக்காரர்கள், ரேகை பார்த்துக் குறி சொல்வோர், நிமித்தக்காரர் என்று வருங் காலத்தைப் பற்றிச் சொல்வோர், பலர் இருந்தனர். சோதிடர்கள் ஜாதகம் பார்த்ததும், கிரகங்கள் நட்சத்திரங்களின் சஞ்சாரத்தைக் கணித்தும், ஜோதிடம் சொல்வார்கள். ஆரூடக்காரர்கள் தங்களிடம் வருவோர் பேசும் சொற்களைக் கொண்டும், ஆரூடம் கேட்கும் வேளையைக் கொண்டும், நூற்றெட்டில் ஓர் இலக்கம் சொல்லும்படி கேட்டும் சுபா சுபங்களைப் பற்றிப் பொதுப்படையாகச் சொல்லுவார்கள். ரேகை சாஸ்திரமோ அன்றைக்கு இருந்தபடியே இன்றைக்கும் இருந்து வருகிறது.

நிமித்தக்காரர்கள் என்பவர்கள் ஞான திருஷ்டி படைத்த முனிபுங்கவர்களைப்போல் அகக் கண்ணினால் பார்க்கும் ஆற்றல் உடையவர்கள். அவர்கள் மனத்தை ஒரு முகப்படுத்தி வைத்துக் கொண்டு, அகக் கண்ணின் உதவியினால் முக்கால நிகழ்ச்சிகளையும் நேரில் பார்ப்பது போல் பார்த்து உரைப்பார்கள்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## குற்றங்களைத் தடுக்க வழி

ஒரு நாட்டை அடுத்துள்ள மலைப்பகுதியில் முனிவர் ஒருவர் தியானத்தில் ஆழ்ந்து இருந்தார்.

அந்தப் பகுதியானது கொள்ளைக்காரர்களுக்கு புகலிடமானது. தாங்கள் நகரத்தில் கொள்ளையடித்த பொருள்களை, மறைத்து வைப்பதற்கும், தாங்கள் ஒளிந்து கொள்வதற்கும், அந்த இடத்தைப் பயன்படுத்தி வந்தனர்.

ஒரு நாள், கொள்ளையர்கள் அங்கே மறைத்து வைத்திருந்த பொருள்களை எடுத்துப் போக வந்தனர். ஆனால், பொருள்கள் காணப்படவில்லை. கொள்ளையர்கள் முனிவர்மீது சந்தேகப்பட்டு, "நாங்கள் இங்கே மறைத்து வைத்திருந்த பொருள்களைக் காணவில்லையே அவை எங்கே?" என்று கேட்டனர்.

"நான் எதையும் அறியேன்!" என்றார் முனிவர்.

அவர் கூறியதை நம்பாத கொள்ளையர்கள் முனிவரை அடித்து, துன்புறுத்திக் கேட்டார்கள்.

முனிவர் மீண்டும், "நான் எதையும் அறியேன்" என்று கூறினார். கொள்ளையர்களுக்குச் சந்தேகம் தீரவில்லை. முனிவரைக் கத்தியால் குத்தி, சித்திரவதை செய்தார்கள்.

"அப்போதும் முனிவர். "நான் எதையும் அறியேன்" என்றார். அதோடு முனிவரை விட்டு விட்டு, கொள்ளையர்கள் ஓடிவிட்டனர்.

மறுநாள் வேட்டைக்கு வந்த அரசன் முனிவரின் பரிதாப நிலையைக் கண்டு வருந்தி, என்ன நடந்தது என்று விசாரித்தான்.

தனக்கு நேர்ந்த கொடுமையைக் கூறினார் முனிவர்.

உடனே காவலர்களை ஏவி, கொள்ளையர்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான் அரசன்.

கொள்ளையர்கள் பிடித்து வரப்பட்டனர். அவர்களுக்கு மரண தண்டனை விதித்தான் அரசன்.

முனிவர் புன்முறுவலுடன், "அரசே! அவரகளைக் கொல்வதால், என்ன நன்மை ஏற்படும்? அவர்களுடைய முரட்டுத் தனத்தால் அவ்வாறு நடக்கின்றனர். அவர்கள் கைகளில் உள்ள கத்திகளே அவர்களை இயங்க வைக்கின்றன. அவர்களுக்குக் கல்விப் பயிற்சி இல்லாமையாலும், பசியாலுமே இவ்வாறு செய்யத் தூண்டுகிறது. நாட்டில் கல்விப் பயிற்சியும், தொழில்களும் பெருகச் செய்தால் அவர்கள் திருந்தி விடுவார்கள்" என்றார்.

அரசனும் அதை ஏற்று நாட்டில் கல்வி கற்க வசதியும், தொழில் பயிற்சியும் உண்டாக ஏற்பாடு செய்தான்.

கொள்ளையர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மட்டுமே சரி என ஒருபோதும் கூறாதீர்கள், புத்திசாலிகள் மற்றவர்களின் கருத்துகளை ஆதரித்து, உற்சாகம் கரை புரண்டோடச் செய்வர்.

வலம்புரி

T.P-021 222 3378

## வாக்களிப்பது எப்படி என்று ஐந்து நிமிடமேனும் கதையுங்கள்

இன்று 18 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி யுடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் முற்றுப் பெறுகின்றன.

இனி வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் மட்டுமே உண்டு.

ஆம். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தத்தம் கருத்துக்களை, பிரசாரங்களை, தேர்தல் விஞ்ஞாபனங்களை வாக்காளர் பெருமக்களிடம் முன் வைத்து, நான் ஜனாதிபதியாக வெற்றி பெற்றால் எவற்றை அமுல்படுத்துவேன் என்பதைத் துலாம்பரப்படுத்தியுள்ளனர்.

இந்த விளம்பரங்கள் இன்று நள்ளிரவு 12 மணியுடன் முற்றுப் பெற்றுவிடும்.

அதன் பின்னர் யாருக்கு வாக்களிப்பதென்பதைத் தீர்மானிக்கின்ற பொறுப்பு ஸ்ரீமான் பொது ஜனங்களுக்கு உரியதாகிவிடும்.

இங்கு தான் ஒரு விடயத்தை நாம் கூறியாக வேண்டும்.

அதாவது எவ்வளவு தான் தேர்தல் பிரசாரங்கள் நடந்தாலும் அந்தப் பிரசாரக் கூட்டங்களுக்குத் தாமாக வந்த மக்கள் தொகை மிக மிகச் சொற்பம் எனலாம்.

இதை நாம் கூறும் போது, அப்படியானால் தென் பகுதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் இருந்த மக்கள் யார்? என்று கேட்கும் போது தான் எல்லாம் ஏற்றி இறக்கிய சனங்கள் என்ற உண்மை தெரியவரும்.

பரவாயில்லை. தறிகெட்ட அரசியல் கலாசாரம் நடைமுறைக்கு வந்துவிட்ட பின்னர், தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்கின்ற மக்கள் தொகை கணிசமாகக் குறைந்து விட்டமை உண்மையே. தவிர, தேர்தல் பிரசாரங்களில் முன்வைக்கப்படுகின்றவற்றை அமுல்படுத்துவது, நடைபெறாத காரணத்தால் எமது மக்கள் அரசியலை வெறுக்கின்றனர்.

இருந்தும் ஏதோ வாக்களிக்கப் போகலாம் என்பது மட்டுமே மக்களின் மனநிலையாக உள்ளது.

இங்கு தான் சிக்கலும் குழப்பமும் ஏற்படுகின்றது. அதாவது வாக்களிக்கப் போகலாம் என்ற தீர்மானத்துடன் இருக்கக் கூடியவர்கள் யாருக்கு வாக்களிப்பது?வாக்களிப்பது எப்படி? என்ற இரண்டு விட யங்களையும் பற்றிச் சிந்திக்காமல் அல்லது அது தொடர்பில் தீர்மானம் எடுக்காமல் இருப்பதால், கடைசி நேரத்தில் யாராவது ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பது என்ற முடிவு எட்டப்படுகிறது.

அந்த முடிவு எட்டப்பட்டாலும் எப்படி வாக்களிப்பது என்று தெரிந்து கொள்ளாமல் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதால் ஈற்றில் செல்லுபடியற்ற வாக்குகளே அதிகமாகின்றன.

எனவே பொது மக்கள் யாருக்கு வாக்களிப்பதாக இருந்தாலும் வாக்களிக்கின்ற முறையை நன்கு அறிந்து கொண்டு வாக்களிக்கச் செல்ல வேண்டும்.

இதற்காக வீட்டில் உள்ளவர்களுடன் குறைந்தது ஐந்து நிமிட மேனும் கதையுங்கள்.

எப்படி வாக்களிப்பது என்பது தொடர்பில் சம்பாசனை நடத்துங்கள்.ஏனெனில் எங்களுக்கான ஆட்சி அதிகாரத்தை நாங்களே தீர்மானிக்கப் போகின்றோம்.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் வாக்குகளைச் சரியாக வழங்குவது கட்டாயமானதாகும்.

# வடக்கு-தெற்கு வேறுபாடு இல்லாமல்

## பொருத்தமான ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டும்

### பவ்ரல் அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

**வடக்கு-தெற்கு என வேறுபாடு இல்லாமல் மிகப் பொருத்தமான ஜனாதிபதியை தெரிவு செய்யவேண்டுமென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "லஞ்ச ஊழல் அற்ற நாட்டை கட்டியெழுப்பகூடிய தலைவர் யார் என பார்த்து மக்கள் ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டும்.

ஐந்து வருடம் அவருக்கான பதவி காலம் வழங்கப்படுகின்றன அவருடைய நோக்கம் சிறப்பாக இல்லை என்றால் நாங்கள் உட்பட நமது எதிர்கால பரம்பரைகளின் எதிர் காலம் இருளில் மூழ்க கூடிய நிலை காணப்படுகின்றன.

எனவே இதனை நன்கு அலசி ஆராய்ந்து தான் நமது வாக்கை செலுத்தவேண்டும்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் ஏற்படும் நிலை குறித்து நாம் அவதானத்துடன் செயற்படவேண்டிய தேவை காணப்படு கின்றது.யார் வென்றாலும் அந்த வெற்றியை கொண்டாடும் உரிமை அவர்களிடையே உள்ளது. தோல்வி உற்றவர்கள் அல்லது ஏனையவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கொண்டாட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

# உணவு, கல்வி, சுகாதாரத்திற்கான வற் வரி நீக்கப்படும்- அநுர

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் எரி பொருள், மின்சாரம் மற்றும் எரிவாயுத் தட்டுப்பாடு இன்றி தொடர்ந்து வழங்கப்படும் என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கல்வி, உணவு மற்றும் சுகாதாரத்திற்கான வற் முற்றிலும் நீக்கப்படும் என்றும், மின் கட்டணம் 30 வீதம் வரை குறைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

"உணவு, கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வற் வரியை முற்றிலும் நீக்க தேசிய மக்கள் சக்தி எதிர் பார்த்துள்ளது.

மின்கட்டணம் குறைப்பு மிகக் குறுகிய காலத்திற்குள் செயற்படுத்தப்படும். வாழ முடியாமல் தவிக்கும் குடும்பங்களுக்கு 10,000 ரூபாயும், மிகவும் கஷ்டப் படும் குடும்பங்களுக்கு 17,500 ரூபாயும் வழங்கப் படும்.

இராஜதந்திர உறவுகள் அரசாங்கங்களுடன் தான் கட்டியெழுப்பப்படுமே தவிர தனிநபர்களுடன் அல்ல.

அதனால், எமது ஆட்சி பற்றி மக்களை அச்சப் படவைக்கும் முயற்சிகள் குறித்து மக்கள் அவதானம் செலுத்தத் தேவையில்லை.

சுதந்திர பொருளாதார உடன்படிக்கைகள் ரத்து செய்யப்படும் என போலியான கதைகளை பரப்பி வருகிறார் ரணில்.

அவ்வாறு செய்ய நாம் முட்டாள்கள் அல்ல. ஆனால், அவற்றில் செய்ய வேண்டிய மாற்றங்கள் உள்ளன. அதனை செய்வோம்." என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## இலட்சக்கணக்கில் அகற்றப்பட்ட சுவரொட்டிகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சட்டவிரோதமாக ஒட்டப்பட்ட ஆறு இலட்சத்து 27,300 சுவரொட்டிகள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், 7,900 சுவரொட்டிகள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 1,500 பனர்கள் அகற்றப்பட்டுள்ளதுடன் 1,100 பனர்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் , மொத்தம் 1,550 கட்அவுட்கள் பொலிஸாரால் அகற்றப் பட்டுள்ளதுடன் 1,600 கட் அவுட்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.மேலும், 7,600 விளம் பரங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ள நிலையில் 10,750 விளம் பரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதிக்குள் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(நி)

## மகனின் மரணத்தை கேட்ட அதிர்ச்சியில் தாயும் மரணம்

### குருநாகல் பகுதியில் சம்பவம்

(குருநாகல்)

மகனின் மரணத்தை தாங்கிக் கொள்ள முடியாத தாயும் உயிரிழந்த சம்பவம் பலரையும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

இந்த சம்பவம் குருநாகலில் பதிவாகியுள்ளது. பிங்கிரிய, பிரசன்னகமகம்மன பகுதியை சேர்ந்த 45 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையான சஞ்சீவ பிரசன்ன மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

இதனை அறிந்த 70 வயதுடைய சஞ்சீவவின் தாய் சந்திரா பியசிலியும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 15ஆம் திகதி மாலை திடீரென மாரடைப்பு காரணமாக சஞ்சீவ சிலாபம் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டார்.எனினும் அவர் அன்றைய தினம் உயிரிழந்துள்ளார்.இந்த செய்தியை வீட்டிற்கு தெரிவிக்கும் போது தாய் சந்திரா பியாசிலி நெஞ்சு வலிப்பதாகக் கூறி தரையில் சாய்ந்துள்ளார்.இதனையடுத்து அவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் அந்த பகுதி மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (நி)

## வாக்காளர் அட்டைகள் இன்னமும் கிடைக்கவில்லையா?

### இன்று முதல் தபால் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் சுமார் 97 வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் 14 ஆம் திகதி நிறைவடைந்ததாக பிரதித் தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் இன்று முதல் தேர்தல் நாள் வரை தமது பிரதேசத் திலுள்ள தபால் நிலை யத்திற்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என ராஜித ரணசிங்க தெரிவித்தார். (நி)

## ரணிலுடன் இணையுமாறு மகிந்தவிடம் தேரர் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து நாமல் ராஜபக்ஷவை விலக்கிக் கொள்ளுமாறு தொடம்பஹல ராகுல தேரர் மகிந்தராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் ஆதரவை வழங்குமாறும் தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கான மாநாடு நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நடைபெற்றது.


இதன்போது. தற்போதைய சூழ்நிலையில் இந்த நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து நாமல் ராஜபக்ஷவை விலக்கிக் கொள்ளுமாறும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குமாறும் மகிந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்







வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்

யாழ்ப்பாணம் - நல்லையம்பதி

# சிங்கார வேலன் சிவ காயத்திரி சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானம் மஹாளய பூஜை விஞ்ஞாபனம் 2024

**நேசம் நிறை நெஞ்சத்தீர்!**

யாழ்ப்பாணம் நல்லையம்பதியில் பல்லாண்டு காலமாக கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வீரமாகாளி அம்பாள் ஆலய ஈஷான பாகத்தில் அமைந்துள்ள சிங்காரவேலன் சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானத்தில் இன்று 18.09.2024 ம் திகதி தொடக்கம் 02.10.2024 திகதி வரை மஹாளய பூஜை நடைபெற வீரமாகாளி தாயார் அருள்பாலித்துள்ளார். அத்தருணம் தாங்களும் ஆசார சீலர்களாகக் கலந்துகொண்டு தங்களின் குடும்பத்தில் இறந்த மூதாதையரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து இன்புற்று வாழ்வீர்களாக!

## உற்சவ விபரம்

18.09.2024 - புதன்கிழமை காலை 10.00 மணி மஹாளய வழிபாடு ஆரம்பம்

29.09.2024 - யாழ்ப்பாண தமிழ் மன்னர்களின் ஆத்ம சாந்திப் பூஜை

30.09.2024 - இலங்கையில் சுனாமி அனர்த்தத்தில் இறந்த மக்களின் ஆத்ம சாந்திப் பூஜை

01.10.2024 - இறுதி யுத்தத்தில் இறந்த மக்களின் ஆத்ம சாந்திப் பூஜை

02.10.2024 - ருத்ர ஹோமமும் திருவாசக முற்றோதலும்

## தினமும்

| | |
|---|---|
| கும்ப பூஜை | - பகல் 10.00 மணி |
| விஷேட பூஜை | - பகல் 11.00 மணி |
| சிரார்த்த வழிபாடு | - பகல் 11.30 மணி |
| மஹேஸ்வர பூஜை | - நண்பகல் 12.00 மணி |

குறிப்பு :- 18.09.2024 ம் திகதி தொடக்கம் 02.10.2024 ம் திகதி வரை காலை 8.00 மணியில் இருந்து அடியார்கள் பிண்டம் இட்டு தர்ப்பணம் செய்து பித்ரு வழிபாடுகள் ஆற்றிக்கொள்ள முடியும்.

தினமும் நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானம் ஆரம்பமாகும். குறித்த தினங்களில் அன்னதானம் செய்ய விரும்புவோர் மற்றும் பிதிர்க்கடமைகள் செய்ய விரும்புவோர்கள் ஆலயத்தில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

**021 221 9044, 077 350 7275**

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
தெளிவே என் சிந்தனை

**இங்ஙனம் : கலாநிதி இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
**முதன்மை பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும்**
**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் - நல்லூர்**

(C1203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப[illegible] இல. 191, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்

## திருமதி தெட்சணாமூர்த்தி விமலா



தோற்றம்: 17.08.1962 மறைவு: 15.09.2024

பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெட்சணாமூர்த்தி விமலா அவர்கள் 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மகேஸ்வரி தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சாந்தம்மா தம்பதிகளின் மருமகளும் தெட்சணாமூர்த்தியின் அன்பு மனைவியும் சிவபாலன் (Canada), தேவபாலன் (Canada), நிர்மலா, ஜெயபாலன் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வச்சோதி, பிறேமாவதி, பானுஷா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற தர்மேந்திரா மற்றும் தர்சினி, தர்சிகா, புருஷோத் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.09.2024 வியாழக்கிழமையன்று மாதனையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

காளி கோவில் வீதி, மாதனை, பருத்தித்துறை. (1969) தகவல்: குடும்பத்தினர்


## வீடு விற்பனைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் ஆறுகால்மடம் பகுதியில் அமைதியான சூழலில் 7 பரப்புக் காணியுடன் அமைந்த புதிய வீடு விற்பனைக்குண்டு

காணி இரண்டாகப் பிரித்தும் வழங்கப்படும்

தொடர்பு:- 077 589 0008

(1966) 077 550 5083



## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (351)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)


## வல்லிபுரம்...

பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை வீதிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பலர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-7,30)

## ஜனாதிபதித்...

யோகம் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கட்சி...

அனைவரையும் பாதுகாப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களை மையப்படுத்தி ஜனாதிபதி அபிவிருத்தி செயலணி ஒன்றை உருவாக்குவோம்.

அதன் ஊடாக அனைத்து நிர்வாக மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நேரடியாகக் கண்காணிப்போம் என்றார். (ம-7)

## தமிழ்...

என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிகளுடன் தொடர்புபட்டுக் கைதாகி சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய முயற்சி செய்வதோடு மன்னாரை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். (ம-7,285)


## உன்னிப்பாக...

தேர்தலில் தாக்கம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## புலமைப்பரிசில்...

தொலைபேசியில் பகிர்ந்த அதிபர் உட்பட 6 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

# மரண அறிவித்தல்



தோற்றம்: 1948•04•23 மறைவு: 2024•09•17

## தண்டபாணி சதாசிவம்

"தங்கோடை, காரைநகர்" இனைப் பிறப்பிடமாகவும் "குட்செட் வீதி, கோண்டாவில்" இனை வசிப்பிடமாகவும் கொண்ட தண்டபாணி சதாசிவம் அவர்கள் நேற்று (2024.09.17) செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தண்டபாணி - இலட்சுமி தம்பதியரின் ஆசை மகனும் தர்சிகாவின் (பட்டு) பாசமிகு கணவனும் காலஞ்சென்ற செல்வம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யசோதரா, துஷ்யந், பிரசாந் ஆகியோரின் பேரன்புக்குரிய தந்தையும் பிரதீபன் (பிரபா), நிராஞ்சலி (Italy) மற்றும் கௌரி, சாயினி, துசிதா, கபிலாஜினி ஆகியோரின் அன்பு மாமனும் கோகிலமணி, காலஞ்சென்ற துரைராசா, காலஞ்சென்ற செங்கமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யனாத்தன், கேசிகன் ஆகியோரின் ஆசைப் பேரனும் காலஞ்சென்ற புலேந்திரன், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சாரதாதேவி, சர்வேஸ்வரன் (France), ஜோதீஸ்வரன் (Italy) ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (2024.09.18) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குட்செட் வீதி, கோண்டாவில். (1968) தகவல்: குடும்பத்தினர் 077 486 9078

### மஹஜன சம்பத

திகதி 2024.09.17 | சீட்டிழுப்பு இலக்கம் 5599

ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கங்கள் 6 5 6 6 5 6

### அத சம்பத

ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கங்கள் 6 6 5 6 | சீட்டிழுப்பு இலக்கம் 174

தேசிய லொத்தர் சபை National Lotteries Board

### தன நிதானய

திகதி - 2024.09.17 | சீட்டிழுப்பு இலக்கம் - 1629

D 46 63 66 81 D

ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

லக்கி Double Chance 74700

தொலைபேசி: 011 460 7000 / 011 232 4324 | உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு: 011 466 9416

### மெகா பவர்

திகதி 17/09/2024 | சீட்டிழுப்பு இலக்கம் 1947

வெற்றி எழுத்து W | சுப்பர் இலக்க 10 | வெற்றி இலக்கங்கள் 04 28 32 66

Double Chance 70922

### லக்கி 7 VIP

திகதி 2024.09.17 | சீட்டிழுப்பு இலக்கம் 425

ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | L7 எழுத்து

S 8 7 8 0 2 5 S

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3841 | சீட்டிழுப்பு திகதி 17.09.2024

ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 06 25 46 74

விசேட வெற்றி எழுத்து C | 52105

தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 2024.09.17 | சீட்டிழுப்பு இலக்கம் 908

வெற்றி இலக்கினம் மிதுனம் | வெற்றி இலக்கங்கள் 19 32 43 47 | மிதுனம்

தன யோக இலக்கம் 12008 | தேசிய லொத்தர் சபை | நாளுக்கான விதி எண் 16

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிர தன சம்பத

17.09.2024 | வெற்றி வாரம் 307 | வர்ணம் சிவப்பு

ஆங்கில எழுத்து D | மற்றும் வெற்றி இலக்கம் 6 6 9 6 3 9

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,200,516.00

செகண்ட் சான்ஸ் 37153

அபிவிருத்தி லொத்தர் சபை DLB

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2573 | வர்ணம் வெளிர் நீலம்

சீட்டிழுப்பு திகதி 17.09.2024 | தினம் செவ்வாய்

வெற்றி இலக்கங்கள் 10 11 19 62 | ஆங்கில எழுத்து I

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,231,438.40

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

திகதி 2024.09.17 | வெற்றி வாரம் 4734 | வர்ணம் பச்சை

வெற்றி இலக்கங்கள் 20 32 44 67 | ஆங்கில எழுத்து N

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,268,702.40

செகண்ட் சான்ஸ் விசேட இல. | ரூ.100,000/- பணப்பரிசு | 2 8 1 6 9

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சசிரி

வெற்றி வாரம் 530 | சீட்டிழுப்பு திகதி 2024.09.17 | ஊதா

வெற்றி இலக்கங்கள் 05 | 19 | 31

இன்று இரண்டு இலட்சத்திற்கு அதிபதியானோரின் எண்ணிக்கை 04

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,692,800/-

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் 4285 | வர்ணம் சிவப்பு

சீட்டிழுப்பு திகதி 2024.09.17 | தினம் செவ்வாய்க்கிழமை

வெற்றி இலக்கங்கள் 15 28 56 57 | கடகம்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,961,555.20

விசேட இலக்கத்திற்கு ரூ.50,000/- பணப்பரிசு 175939

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

R | 32 (சுப்பர் இலக்கம்) | 10 40 43 50

சீட்டிழுப்பு வாரம் 1749 | வர்ணம் இள இளஞ்சிவப்பு | திகதி 17.09.2024 | செவ்வாய்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 545,459,940.60

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி ADA KOTIPATHI

செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம்: 2399 | வர்ணம்: கரும் நீலம் | சீட்டிழுப்பு திகதி: 2024.09.17

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,635,021.60

வெற்றி இலக்கங்கள் 03 12 25 49 | ஆங்கில எழுத்து T

ரூ.100,000/- பணப் பரிசுக்குரிய விசேட இலக்கங்கள் 251909

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






අනුර කුමාර දිසානායක

அநுர குமார திசாநாயக்க

Anura Kumara Dissanayake



செப்டெம்பர் 21 இல் உங்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையையும் செல்லுபடியாகின்ற அடையாள அட்டையும் எடுத்துக்கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குச்சென்று மறுமலர்ச்சி யுகத்தின் பங்காளியாக மாறுங்கள்.

www.akd.lk

(சி-027)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org